IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS 207/18**

**நாள் 26.08.2021**

**பேச்சியத்தாள்**

**வா.சா.1** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**: -

1ம் பிரதிவாதி என்னுடைய அண்ணன். 2 முதல் 5 பிரதிவாதிகள் என்னுடைய அண்ணன் முருகையாத்தேவரின் வாரிசுகள். எனக்கு 30 வருடங்களுக்கு முன்பாக திருமணம் நடந்தது. 1987ல் திருமணம் நடந்ததா என்றால் நான் படிக்காதவள் என்பதால் தேதி தெரியாது. எனக்கு திருமணம் ஆனதிலிருந்து சொக்கம்பட்டி கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன். என்னுடைய தகப்பனார் பத்து பதினேழு வருடங்களுக்கு முன்பாக இறந்து விட்டார். என்னுடைய தகப்பனார் இறந்து 6 வருடங்கள் கழித்து என்னுடைய தாயார் இறந்து விட்டார். 1ம் பிரதிவாதியிடம் இருந்தும் மற்றொரு சகோதரர் ஆன முருகையாத்தேவர் என்பவரிடத்திலிருந்தும் 10.7.1991ல் கிரைய ஆவண எண் 1043 ன்படி பிராது 3 வது அயிட்ட சொத்தின் ஒரு பகுதியை நான் கிரையம் வாங்கியிருக்கிறேனா என்றால் என்னுடைய ஒரு பங்கு போக மீதி இரண்டு பங்கிற்கு கிரையம் வாங்கியிருக்கிறேன். நான் கூறுவது தவறு என்றும் இந்த விபரங்கள் என்னுடைய கிரைய பத்திரத்தில் துலங்காது என்றால் நான் படிக்காதவள் என்பதால் அது பற்றி எனக்கு தெரியாது. 2 அயிட்ட சொத்தை பொருத்து 1ம் பிரதிவாதியும் முருகையாத்தேவரும் 3ம் நபர்களுக்கு 20 வருடங்களுக்கு முன்பாகவே கிரையம் செய்து கொடுத்து விட்டார்கள் என்றால் அவ்வாறு கிரையம் எதுவும் செய்யவில்லை. நான் கிரையம் வாங்கிய 3 செண்டின் அருகில் தான் பிராது 2 அயிட்ட சொத்து இருக்கிறது என்றால் சரிதான். பிராது 2 அயிட்ட சொத்தில் அவ்வாறு கிரையம் வாங்கியவர்கள் எனது

வீட்டின் அருகில் தான் 20 வருடங்களுக்கு முன்பாகவே வீடு கட்டி குடியிருந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அந்த வீடுகளில் உள்ள நல்ல விஷேசங்களுக்கு நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கிய 3 அயிட்ட ஒரு பகுதி சொத்தை தவிர மற்ற சொத்தும், பிராது 1 அயிட்ட சொத்தும், பிராது 7 வது அயிட்ட சொத்தும், பிராது 4 அயிட்ட சொத்தும் ஆகியவற்றை என்னுடைய தந்தையார் என்னுடைய தாயார் பெயருக்கு 28.5.1957ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்து என்னுடைய தாயார் காலத்துக்கு பின்பு அவருடைய ஆண் வாரிசுகளுக்கு தான் சென்று சேர வேண்டும் என்று எழுதி வைத்திருக்கிறார் என்றால் சரியல்ல. மேலும் 14.6.1987ல் 4 அயிட்ட சொத்தின் மற்றொரு பகுதியை என்னுடைய தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கும் முருகையாத்தேவருக்கும் நன்கொடை ஆவணம் எழுதி வைத்திருக்கிறார் என்றால் அது பற்றி தெரியாது. அது மோசடியாக அவ்வாறு கூறுகிறார். இந்த நன்கொடை ஆவணத்தில் அவர்களுக்கு கிடைத்த சொத்தில் இருந்து தான் நான் கிரையம் வாங்கியிருக்கிறேன் என்றால் அவர்களுடைய 2 பங்கினை நான் கிரையம் வாங்கினேன் அவ்வாறு கூறுவது பொய் என்றால் சரியல்ல. பிராதில் 5, 6 அயிட்ட சொத்துக்கள் சர்வே நம்பர். 751/5பி, 751/6பி சொத்தை தங்கத்தேவர் மகன் பெரியசாமி தேவரிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கிய சொத்துக்கள் ஆகும் என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்த்து தவறாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. பட்டா எண் 2199ல் உள்ள 751/13ஏ, 751/7 மற்றும் பட்டா எண் 1796ல் உள்ள புல எண் 751/13பி சொத்தும் என்னுடைய தகப்பனார் 1ம் பிரதிவாதிக்கும் முருகையாத்தேவருக்கும் 1957ல் எழுதி வைத்த நன்கொடை ஆவணத்தின் மூலமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. பிராது தபசின் சொத்துக்களை பொருத்து என்னுடைய தகப்பனாருக்கே தற்பொழுது உரிமை இல்லாத நிலையில் 1ம் பிரதிவாதியிடம் இருக்கின்ற நிலையில் தபசின் சொத்துக்களை கூட்டாக அனுபவித்து வந்தேன் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் 28.5.1957ல் எழுதி வைத்த செட்டில்மெண்ட்

ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்று கூறுவது தவறானது ஆகும் என்றால் சரியல்ல. 14.6.89ல் எழுதி வைத்த நன்கொடை ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றும் தவறானது ஆகும் என்றால் சரியல்ல. பிராது 1, 4, 7 அயிட்ட சொத்துக்களை பொருத்து 1ம் பிரதிவாதியும் அவரது சகோதர்களும் பாகம் பிரித்து கொள்ளவில்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. இந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் 4, 5 பிரதிவாதிகளும் அவர்களுக்குள் பாகம் பிரித்து கொண்டிருக்கிறார்கள் என்றால் சரியல்ல. பிராது 1, 3 அயிட்ட சொத்துக்களை பிரித்து பாக பிரிவினை கோரி வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன். அதற்கு 1ம் பிரதிவாதி தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். அது சம்பந்தமாக பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியை பழி வாங்க வேண்டும் என்பதற்காக 2 முதல் 5 பிரதிவாதிகளின் தூண்டுதலின் பெயரில் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே நம்பர் 751/7, 751/14பி, 751/13ஏ இந்த சொத்துக்கள் 1ம் பிரதிவாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டு தனித்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அவருக்கு பாத்தியப்பட்ட இந்த சொத்துக்களை பொருத்து அவருடைய மகனான மணிகண்டன் என்பவருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்து அதன் அடிப்படையில் மணிகண்டன் அனுபவத்தில் இந்த சொத்துக்கள் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 751/13பி சொத்தை பொருத்து 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனார் பெருக்கு பட்டா ஏற்பட்டு அவர் அனுபவித்து வந்து அவருக்கு பின் 2 முதல் 5 பிரதிவாதிகள் அனுபவித்து கொண்டு வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிராது தபசின் சொத்துக்களை பொருத்து 1957லிலும் 1989லிலும் என்னுடைய தகப்பனார் 1ம் பிரதிவாதி மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கும் ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்து அவர்கள் அனுபவத்தில் இருக்கின்ற நிலையில் இந்த சொத்துக்களில் பாகபிரிவினை கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிராது தபசின் சொத்துக்களை பொருத்து தற்பொழுது என்னுடைய தந்தைக்கோ, தாய்க்கோ உரிமை இல்லாத நிலையில் எனக்கு பாகம் கோர உரிமையில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனக்கு அருகில்

வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் கோரியிருக்கும் 3ல் ஒரு பாகம் எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. என்னுடைய பிராதினை இந்த பிரதிவாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.